செய்தித் தாளாகப் பதிவுபெற்றது.

வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஞூ (1889) ஆவணிமீ 28-ம் உ அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அஅ] யாழ்ப்பாணம்: நள ஞூ சித்திரை மீ உரு உ வெள்ளிக்கிழமை (7-5-1976) [இல: ரு

# நல்லையில் சம்பந்தப் பெருவிழா

## திருநெறிய தெய்விக மாநாடு

"திருஞானசம்பந்தப் பெருமானால் பதிகங்கள் பாடப்பெற்ற இரு புண்ணிய தலங்களை இரு கண்களாகப் பெற்றது எம் ஈழநாடு. ஈழநாட்டிற்கும் ஞானசம்பந்தப் பெருமானுக்கும் உள்ள அருட்தொடர்பின் காரணமாக நாவலர் பெருமான் தமிழ் வளர்த்த நல்லையில் இயங்கி வரும் ஞானசம்பந்தர் ஆதீனம் சைவமரபை பேணி, தமிழோடு இசையாகிய திருமுறைகளையும் வளர்த்து வருகின்றது. கடந்த ஒன்பது ஆண்டுகளாக பணியாற்றி வரும் ஆதீனம் சித்திரை ஆதிரையில் பிறந்து, ஞானப்பாலுண்ட சம்பந்தப் பெருமானுக்கு விழாவும் - அதன் சார்பாகத் திருநெறிய தெய்விக மாநாட்டையும் ஒழுங்கு செய்துள்ளது.

ஈழத்தில் திருமறையும், திருமுறையும் செழிக்க வேண்டும். திருக்கேதீச்சரம் அன்ன ஆலயங்கள் சீர்பெற வேண்டும். ஈழம் வாழ் சைவப் பெருமக்கள் திருவருள் துணை பெற வேண்டும்".

இவ்வாறு நல்லை. ஆதீன குரு மகா சன்னிதானம். ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் மாநாட்டின் முதலாம் நாள் விழாவிற்கு அருளுரை வழங்கியபோது குறிப்பிட்டார்.

விழாவின் முதல் நாள் நிகழ்ச்சியில் சொக்கன் தலைமையில் கவியரங்கும், ஆதீன பண்ணிசைப் புலவர் திரு. எம். ஆர். ஞானசம்பந்தனின் பண்ணிசைக் கச்சேரியும் நடைபெற்றன.

மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் திரு. க. கணபதிப்பிள்ளை, திரு வே. சங்கரப்பிள்ளை பிரமஸ்ரீ. க. குகசர்மா, திரு மயில். அமிர்தலிங்கம் ஆகியோர் பொருத்தமான விளக்கவுரையுடன் ஆரம்பமானது. ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளின் அருளாசியின்பின திருமதி ஜானகி மகேஸ்வரய்யர் அவர்களின் பண்ணிசைக் கச்சேரி நிகழ்ந்தது.

மூன்றும் நாள் நிகழ்ச்சிகளை யாழ். நீதிபதி திரு. கே. ஞானச்சந்திரன் அவர்கள் மங்கல விளக்கேற்றி தொடங்கி வைத்தார்கள் அதனை தொடர்ந்து ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளின் "சம்பந்தர் மூவர்" எனும் பொருள் பற்றிய சங்கீத உபன்யாசம் நடைபெற்றது. இறுதியில் திருமதி பூமணி இராசரத்தினம் அவர்களின் பண்ணிசைக் கச்சேரியும் இடம் பெற்றது;

### பழம்பிள்ளையார் கோயில்

வழமையான கந்தபுராண படனம் 9-5'1976 திகதி மல்லாகம் பழம்பிள்ளையார் கோயிலில் ஆரம்பமாகின்றது;

சிவஸ்ரீ வ. குகசர்மா பௌராணிகர் புராணத்துக்குப் பயன் கூறும் பணி ஆற்றுவர்,

## மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகம்

— புலவர் சிவங். கருணாலயபாண்டியனார் அவர்கள் —

(முன் வளர்ச்சி — )

விகாரம்: பிறப்புப் பிணி மூப்புச் சாக்காடுகளுஞ் சோர்வு, கவலை, கையாறழுங்கல்களும் அழுக்காறவா வெகுளி செற்றங்களும் பிறவுமாம.

விடக்கு, இறைச்சி, இஃது இனம்பற்றி என்பு நரம்பு சீக்கோழை எச்சில் எரு, மள்ளு, மூளை, தோல், குருதி முதலாய வற்றைத்தழுவி நிற்கும்.

மள்ளு: சிறுநீர்க்குக் கொங்குநாட்டு வழக்கு

ஐயா!: புலம்பல்விளி அரனேயோ ஓகாரம் முறையிடுதற் குறிப்பின்கண் வந்தது. மேல் அல்லற்பிறவி யறுப்பானேயோ வென்று ஓங்காரம் அதுவன்று.

**போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்**
**கண்ணுதலான் றன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி,**
**யெண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி**

விண்ணிறைந்தென்பது முதல் எம் ஐயா அரனேயோ வென்பதன் காறும் போற்றிப் புகழுமாறு கொண்டெடுத்துக் கூறி அப்புகழுரை செய்த சான்றோர்க்கு மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமற் கள்ளப்புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே யெனப் பரிசளித்தமையுங் கூறிப் பாராட்டிப் புகழ்ந்தது அடிகள் அவ்வாறு தாமும் இறைவனைப் போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யாகிப் பிறவாமைப் பெரும்பரிசு வேண்டுதற் குறிப்புடைத்து. எனவே பிறரும் அவ்வாறு போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யாகிப் பிறவித்துன்பம் அறக்கடிதல் வேண்டுமென்னுந் திருவுளக் கருத்துந்தானே பெறப்படும்.

வினைப்பிறவி சாராமே எனவமையும் மீட்டிங்கு வந்து சாராமே யென்றது பிறவித் துன்பங் கண்கூடாதல் காட்டிப் பிறவி சாராமையை வலியுறுத்துதற் பொருட்டென்க.

குரம்பை மன்னுயிர்க்குரியதாகக் கட்டப்படுவதெனினும் ஐம்புலக்கள்வர் அகப்பகையாகி அவ்வுயிரை வஞ்சித்துத் தம் வழிப்படுத்தலின் உயிர்க்குரம்பையைக் கள்ளப்புலக்குரம்பை யென்றார்.

மேற் பொய்கெட்டு மெய்யானார் கூற்றில் அவர்தம்மைக் குறிக்குந்தொறுந் தன்மையொருமையாற் கூறியது அவர் தனித்தலைமைய கூறுதலானுந் தன்மைக்குப் பன்மையின்மையானுமென்க.

அதற்கியையப் பொய்கெட்டு மெய்யானென்னு மெய்யானாரென்றது தனித்தன்மைபலவும் படர்க்கையிற் பலராதல் பற்றியென்க.

தன்மைச்சொல்லும் உயர்திணைச் சொல்லாதலின் இது திணைவழுவன்று. ஒருமைப்பன்மை மயக்கமாய் வழுவமைதியாயிற்று. பாலிடவழுவமைதி.

(வளரும்)

## தருமையாதீன குருமணியின் ஆசியுரை

உ
குருபாதம்



தருமையாதீனம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

தருமபுரம், மாயூரம் P. O.
12-4-1976

"ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே"

மக்களை மாக்களினின்றும் வேறுபடுத்துவது அவர்களுக்கு உள்ள பகுத்தறிவே, அஃதாவது. "நல்லது இது, தீயது இது" என்பதை உணரும் உணர்வே என்பர்; ஆயினும் தீயதை நீக்கி நல்லதைக் கொள்ளுதலைச் செயலில் காட்டவேண்டும்; அதுதான் உண்மையான பகுத்தறிவாகும், இதுபற்றியே திருவள்ளுவர்,

"சென்ற இடத்தால் செலவிடா, தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்பதறிவு" என்றார்.

"சென்றபடியே செல்லும்படி விடுதல் கூடாது" என்றதும் நன்றின்பால் செலுத்தவேண்டும் என்றதும் சிறப்பாக கருத்தை நோக்கினவாயினும், மற்றும் மொழி, மெய் என்பவைகட்கும் அவை பொருந்துவனவேயாம். ஆகவே திரிகரணங்களையும் தீயதிற் செலுத்தா இயல்புடையவரே மக்களாவர் என்பது விளங்குகிறது. இதைத்தான் 'திரிகரணத் தூய்மை' என்கிறார்கள், இந்நிலை உண்மையில் சமய வாழ்க்கையினாலேதான் உண்டாகும், அஃதல்லாதபொழுது இந்நிலை வாய்த்தல் அரிதாகும், எனவே மக்களை மக்களாகச் செய்வது சமயமே,

'சமயங்கள் பலவற்றிலும் தலையாயது சைவ சமயமே' என்பதைப் பிரமாணங் காட்டி நிறுவவேண்டுவதில்லை. ஏனெனில் இவ்வுண்மை யாவராலும் நன்கறியப்பட்டது.

இலங்கை வாழ் தமிழர் சமயம் சைவ சமயமே. இதில் ஒரு சிறிது வேறுபாட்டிற்கும் இடமில்லை. அதனால் இவர்கள் வாழ்கின்ற யாழ்ப்பாணப் பகுதியில பற்பல பெயர்களுடன் பற்பல நிறுவனங்களை அமைத்து சைவ சமயத்தை இவர்கள் வளர்த்து வருகின்றார்கள். எனினும் இந்த நிறுவனங்கள் அனைத்தும் ஒரு பொது அமைப்பின்கீழ் இருந்து செயலாற்றுமாயின், தனிப்பணிகள் பலவும் ஒருங்கிணைந்து ஒருமுகமாக இயங்கிச் சைவத்தின் வளர்ச்சி இன்னும் மிகுந்து காணப்படும். இதனைக் கருத்திற்கொண்டு யாழ்ப்பாணத்து நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீனம், ஸ்ரீமத் சுவாமிநாத பரமாசாரிய சுவாமிகளும், மெய்கண்டார் ஆதீனம் ஸ்ரீமத் ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகளும், 'ஈழத்துத் திருநெறிய தெய்விகப் பேரவை' என்னும் பொது நிறுவனம் ஒன்றை நிறுவி அதில் பல சைவ சமய நிறுவனங்களும் இணைய வாய்ப்பளித்திருப்பது மகிழ்ச்சிக்குரியது; யாழ்ப்பாணத்தில் ஆண்டுதோறும் வழக்கமாக நடைபெறுகின்ற அகில இலங்கைத் திருநெறிய தெய்விக மாநாடு இவ்வாண்டு மேற் குறித்த பொது நிறுவன நெறியில் நடைபெறுவதும், அவ்வமயம் ஞானசம்பந்தர் அருள் வரலாற்று விழாக்கள் முறையாக நிகழ்வதோடு "அருளமுதம்" என்னும் மலா ஒன்று வெளி வருவதும் பெரிதும் பயன் தரத்தக்க செய்திகளாகும்;

மாநாடு எல்லா வகையிலும் சிறப்புற நிகழ்ந்தும், அருளமுத மலர் நனகு மலர்ந்தும் சைவசமய வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிய ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கர் திருவருளைச் சிந்திக்கின்றோம்;

### கந்தபுராண படனம்

வண்ணை. சாந்தையர் மடப் பிள்ளையார் கோயிலில் எட்டாவது முறையாக 30-4-76 தொடக்கம் கந்த புராண படிக்கப்பெற்று வருகின்றது. சைவப் புலவர் திரு. வ. சந்தசாமி ஆசிரியர் தொடக்கி வைத்தனர். நடத்துபவர் திரு: அ. சிவசுப்பிரமணியம்,

### 'மரம்' தரும் மதியுரை

மழைக்காலக் குளிரைப் போக்க உங்கள் வீட்டு வெம்மை வெயிற்கால வெப்பந் தணிக்க உங்களுக்கு நிழல் களைப்புத்தீர ஆறவமர தரை சடலோடித் திரவியந் தேட பிறயாவும் எனதுதியாகமே! மனிதர்காள்! என்னைத் தறித்து அழிக்க உங்களுக்கு மனம் வருமா! வேண்டாம் மேலும் எனைப் பயன்படுத்தி வாழ்வீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை**

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையக முந் துயர் தீர்கவே,
திருச்சிற்றம்பலம்

# இந்து சாதனம்

நள ஹூ சித்திரை மீ உரு-வ வெள்ளி

# திருத்தொண்டர்களுக்குத் திருக்கேதீச்சரத்திற் சிலை

"தொண்டர் நாடொறுந் துதிசெய
அருள் செய் கேதீச்சரம் அதுதானே"

என்று திருஞான சம்பந்த சுவாமிகள் போற்றிய திருக்கேதீச்சரத்திலே அறுபத்துமூன்று நாயன்மாரை வழிபடும் அமைப்பு இன்னும் இரண்டு திங்களில் அப் பழம் பதியில் நிகழவிருக்கும் புனித புண்ணிய மகா கும்பாபிடேகக் காலத்தில் அமையத் திருப் பணிச் சபையார் எடுத்திருக்கும் முயற்சியைச் சைவ மக்கள் நிறைவேற்றி வைத்தல் கடனாகும்.

அறுபத்துமூவர் அரனெனப்படுவர். அத்தகைய உத்தமத் தெய்வ தத்துவம் வாய்ந்தவர்கள். அவ் வடியார்களை நினைவு கூருவதற்குச் சிவாலயம் உரிய இடமாகும். தாயகத்தில் விளங்கும் சிவத்தலங்களில் நாயன்மாரின் உருவங்களைக் கண்டு மனங் களிக்கக் கூடிய காட்சிகளைக் காணலாம்.

திருத்தொண்டர்களின் அருந் தொண்டுகளை வழி படுவோருக்கு நினைவுகூர வைக்கும் நெறி ஈழ நன் னாட்டில் ஈசன் கோயில்களில் இருத்தல் வேண்டும். திருக்கேதீச்சரத்திலே இப்பொழுது சில ஆண்டுகளாக நடைபெற்று வருகின்ற திருப்பணி வேலையோ பிரமாண்டமானது. அடியார்களின் அகத்தில் எழு கின்ற அன்பு நெகிழ்ச்சியே தொடர்ந்து திருப்பணி உபயங்களாக வருகின்றது. சைவ உலகத்தின் மறு மலர்ச்சியை புனருத்தாரணம் செய்யப்பெறும் திருக் கேதீச்சரத்திலே தோன்ற வைப்பது சைவ மக்கள் கடமை.

சைவ அன்பர்களே! உங்கள் வாழ் நாளிலே ஒரு பெரும் சிவ கைங்கரியம் செய்யும் வாய்ப்பை இறைவன் உங்களுக்குக் கொடுத்திருக்கின்றான். இந்த அருந் தருணத்தைக் கை தவறவிடாது திருக் கேதீச்சரப் பெருமான் சந்நிதியிலே அறுபத்துமூன்று நாயன்மார்களையும் தரிசித்துப் பெருமானை வணங்கும் வசதியை அமைக்கும் பணி உங்கள் பாலமைந்திருக் கின்றது. சிவப் பணியாற்றித் தவப் பயனை அடை யுங்கள்; பெருவாழ்வுக் கருகதையாகும் உரிமை யைப் பெறுங்கள்.

## மகா கும்பாபிடேகம்

தெல்லிப்பளை கிழக்கு கன்னி வளவுப் பிள்ளையார் கோயில் அட்டபந்தன சம்புரோக்ஷண மகாகும்பாபிடேகம் சித்திரைத் திங்கள் 2௨-ம் நாள் அதிகாலை 7 மணிக்கு சிறப்பாக நடந்தது.

சிவத்திரு இ. நவரத்தினக் குருக்கள் (உரும்பிராய்) பிரதிஷ்டா குருவாக நிகழ்ச்சியைச் சிறப்பாக ஆற்றினர்.

## மண்டலாபிடேகம்

மல்லாகம் காளிம்பாள் கோயில் மண்டலாபிஷேகம் செவ்வாய்க்கிழமை சித்திரைத் திங்கள் 5௰-ம் நாள் அலங்காரமாக நடைபெற்றது.

x x x

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் பரிவார மூர்த்தியாக விளங்கும் ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி மண்டலாபிஷேகம் சித்திரைத் திங்கள் பத்தொன்பதாம் நாள் (1-5-76) சனிக்கிழமை ஆலய தர்மகர்த்தா சபையினரின் உபயமாக நடைபெற்றது.

## இராமநாத ஜயந்தி

வருகிற ஞாயிற்றுக்கிழமை 9-5-1976 திகதி மல்லாகம் இந்து சமய விருத்திச் சங்கம் இராமநாத வள்ளல் நினைவுக் கூட்டத்தை நிகழ்த்த ஒழுங்கு செய்திருக்கின்றது. திரு. அ. சரவணமுத்து பே, பி. தலைமையில் நடைபெறும் விழாவில் கலாநிதி இந்திரபாலாவும் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டியும் சொற்பெருக்காற்றுகின்றனர்.

கருந்துக் கட்டுரை

## சேர். பொன். இராமநாதனின் இணையிலாத்தொண்டின் இலட்சியம்

[செல்வி இரதி சிற்றம்பலம் மகாசனக் கல்லூரி 11-ஆம் தரம்]

1930-11-26 என்றுமே மறக்க முடியாத நாள்; மக்கள் வாழ்விலே துயர் தோய்ந்த நாள். ஈழத்து அரசியல் வானில் இருள் கவ்விய நாளும் அன்றே. ஆம்! அன்றுதான் ஈழத்து அரசியல் தனது நிகரற்ற தனிப் பெருந் தலைவராய், முடிசூடா மன்னனாய் விளங்கிய முதுபெருந் தலைவர்; "எல்லாளன் காலத்திலும் தலைசிறந்த ஒரு இலங்கையர்" என்று காலஞ் சென்ற தலைமை அமைச்சர் திரு. டி. எஸ். சேனநாயக்காவால வாழ்த்தப்பட்ட சேர். பொன. இராமநாதன், தனது எண்பதாவது வயதில் தன் வாழ்வை முடித்துக்கொண்டார். அவருக்கு இறுதி வணக்கம் செலுத்த ஈழத்தின் நாற்திசையிலுமிருந்து இனம், மதம் கடந்தநிலையில் திரண்டிருந்த மக்கட் கூட்டம், அவர் பெற்றிருந்த ஒப்பற்ற நிலையை — மக்கள் அவர்பால் காட்டிய அளப்பரிய அன்பைப் பாரினுக்கு பறைசாற்றியது.

சேர். பொன். இராமநாதனின் தமிழ்ப் புலமை, வடமொழி ஆற்றல், ஆங்கில அறிவு ஆதியன விளக்கத் தக்கன. மும்மொழியிலும் புலமை படைத்து உலகின் பல மொழிகளின் தன்மையைத் தகைசான்ற முறையில் உய்த்துணர்ந்த இம் மூதறிஞனை உலகம் வியந்து போற்றியதில் வியப்பில்லை. இங்கிலாந்து அமெரிக்கா மற்றும் ஏனைய ஐரோப்பிய ஏடுகளிலும் இவரின் பல்துறை அறிவுமிக்க பேச்சுக்களைக் கேட்டு, சிந்தை நிறைவு எய்திய மக்களின் எண்ணிக்கை எண்ணில் அடங்காது. இதனாலேதான் "ரோஸ்பெரிதுரை" (Lord Rosebury) அவர்கள் என் பேரரசின் தலை சிறந்த பேச்சாளர் என்று கூறிச் சென்றார் போலும். குறிப்பாகத் தென்னகத்திலும் ஈழத்திலும் இராமநாதன் அவர்களாற்றிய சமயத் தத்துவச் சொற்பொழிவுகள் கற்றறிந்த நல்லறிஞருக்கு நல்விருந்து. வேதாந்தத்தை விளக்கி, சித்தாந்தத்தின் உட்பொருளைத் துவக்கி, புத்த, கிறிஸ்தவ, இஸ்லாமிய கோட்பாடுகளுடன் ஒப்புநோக்கி அவர் ஆற்றிய விரிவுரைகள், அவரின் பரந்த நுண்ணறிவுத் திறனுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. மறைமலையடிகளாரைச் செயலாளராகக் கொண்டு இயங்கிய சைவ சித்தாந்த சமாசத்தில் 1906 லும், பின்பு 1922 லும் அதே சமாசத்தில் அவர் சித்தாந்தம் பற்றி நிகழ்த்திய பேருரைகள், அவரின் சிந்தை சித்தாந்தத்தில் மூழ்கியிருந்ததென்பதற்கு சிறந்த எடுத்துக் காட்டு. அமெரிக்காவில் தங்கியிருந்த காலத்தில் இராமநாதன் அவர்கள் ஓரிடத்தில் "என் மார்க்கம் சைவமார்க்கம்" எனக் கூறியுள்ளார்.

[illegible]

(வளர்ச்சி 3-ம் பக்கம்)

## பண்டைக்காலப் பண்ணிசையும் - அதன் தற்கால நிலைமையும்

( பிற் சேர்க்கை )

[ உயர்திருவாளர் மு. குமாரசிங்கம் ]

[ இசைப் பேரறிஞர் இ. அப்பாசாமி ஓதுவாமூர்த்தியின் சீடன் ]

பழந்தமிழிசைக்கு முழுநூலாய் ஒன்றும் தமிழில் இப்போதுகிடையாது. எனினும் நாடகத் தமிழ்நூலான சிலப்பதிகாரத்தின் அருஞ்சொற்பொருள், அடியார்க்கு நல்லார் உரை என்பவற்றால் அறிமுகமாகும். இசைநூல்களெல்லாம், பெயரளவிலும், பேச்சளவிலுமேயிருந்தனவேயன்றிக் கற்றுணர்வார்க்குப் பெரிதும் பயன்படாதொழிந்தன,

சென்னைத் தமிழிசைச் சங்கத்தின் தேவாரக்குழு, பண் பழந்தக்கராகத்துக்கு அமைந்த,இராகம் "ஆரபி" என நிர்ணயித்து அறிக்கை வெளியிட்டுள்ளது, இசைப் பேரறிஞர் P. சாம்பமூர்த்தி, B A., B.L அவர்களும் 'கர்நாடகசங்கீதம்' 1970 , பாகம் 3 பக்கம் 183-ல் "தேவாரத்தில் வரும பண் பழத்தக்க இராகம் என்பது ஆரபி இராகமே என்று குறிப்பிட்டுள்ளார்,

இது இங்ஙனமிருக்க, சென்னை தமிழிசைச் சங்கத்தார், 1966-ம் ஆண்டில் வெளியிட்டதும் இசைப்பேரறிஞர், M. M தண்டபாணி தேசிகர் அவர்கள் 'இயற்றியதுமான தேவாரத் திவ்வியப் பிரபந்தத் திருப்புகழ்ப் பாடல்கள்' என்ற நூல் பக்கம் 12-ல் திருஞானசம்பந்தர் பாடிய 'பூந்தேந்தாயன' என்றபண் பழந்தக்கராகத்துத் தேவாரத்தைச் சுத்த சாவேரி இராகத்தில் சுரப்படுத்தப்பட்டுள்ளது. இதை ஓதுவாமூர்த்திகள் ஓதும்போது அவரோஹணத்தில் 'நி..க' சுரங்கள் கலந்ததை அவதானித்திலர்போலும்,

மேலும் இந் நூல், பக்கம் 3-ல் சுந்தரர் பாடிய 'பித்தாப்பிறை சூடி'-என்னும் தேவாரத்தை ஓதுவாமூர்த்திகள் பண் இந்தளம் புராதன இராகம் நாதநாமக்ரியயில் ஓதிவந்திருக்கவும் அதனைப் பொருட்படுத்தாது மேற்படி தேவாரத்தை பண் இந்தளம் பிந்திய த்மாயாமாளவ கௌள இராகத்தில் சுரப்படுத்தி வெளியிட்டுள்ளதும் ஈண்டுகவனிக்கதக்கது. நாதநாமக்ரிய இராகத்துக்குப் புராதன காலத்தில் வழங்கிய பெயர் "நாதராமக்ரிய' 2 ஆகும்.

இன்னும் பிரபல்யமான ஓதுவா மூர்த்திகள் பண் பஞ்சமத்தைப் புராதன இராகம் 'ஆகிரி'யில் ஓதிவந்தார்கள், மேலும் சங்கீதவித்துவான் (பெருங்குளம்) வா. ஸ்ரீநிவாசஐயங்கார் அவர்கள் 1917ல் ஆண்டில் நடாத்திய 'கான வித்தியா ப்ரகாசினி' என்னும் மாதத் சஞ்சிகை பக்கம் 124 இராகலக்ஷணம்' என்னும் கட்டுரையில் இராக அகராதி வரிசையில் 'ஆகிரி' இராகம் 17-வது மேளகர்த்தா சூரியகாந்தத்தின் ஜன்யமென்றும், இதன் ஆரோஹணவவரோஹண சுரங்கள், சமகமபத நிச் சநிதபமகரிச — என்றும் குறிப்பிட்டிப்பதும் ஈண்டு கவனிக்கத்தக்கது,

இதைவிட, இசைப்பேரறிஞர் இ. அப்பாசாமி ஓதுவாமூர்த்தி அவர்களும், தாமியற்றி, 1930 ல் வெளியிட்ட, "சங்கீத ஆசான்" என்னும் நூல், பாகம் 1, பக்கம் 24-ல், 'ஆகிரி' இராகத்துக்கு இதே லக்ஷணத்தைக் கொடுத்திருப்பது மேலும், இதனை வலியுறுத்துகின்றது.

இவ்விடயத்தைத் தாம் அறிந்திருக்காமையினால், இசைப் பேரறிஞர் பி. சாம்பமூர்த்தி அவர்கள், தாமியற்றி வெளியிட்ட 'கர்நாடக சங்கீதம்" (1970) பாகம் 3 பக்கம் 159 ல், "ஆகிரி" இராகம், 8-வது மேளகர்த்தா, ஹனுமதோடி இராகத்தின் ஜன்யம் என்றும், 20-வது மேளகர்த்தா, நடபைரவி இராகத்தின் ஜன்யம் என்றும், பலர் அபிப்பிராயப் படுகிறார்கள் ஆனால் 14-வது மேளகர்த்தா, வகுளாபரண இராகத்தின் ஜன்யமாகக் கொள்வது தான், சாலப் பொருத்தம் என்று நிச்சயம் செய்துள்ளார்.

அடுத்து, இசைப்பேரறிஞர் M. M தண்டபாணி தேசிகர் அவர்களும், பழைய சம்பவங்களை அறியாமையினால், தாமியற்றிய "தேவாரத் திவ்வியப் பிரபந்தத் திருப்புகழ்ப் பாடல்கள்" என்னும் நூல், பக்கம் 34 ல், 'ஆகிரி' இராகம், 14-வது மேள" கர்த்தா, வகுளாபரண இராகத்தின் ஜன்யமென்று குறிப்பிட்டதோடு, "தானெனை முன்படைத்தான்" என்ற சுந்தரர் பாடிய தேவாரம், பண் பஞ்சமம, சுரப்படுத்தியும் உள்ளார்.

தமிழ்ப் பண்கள், பண்டைக்காலத்தில், ஒரு தனிக் கலையாகப் போற்றி வளர்க்கப்பெற்று வழங்கின தென்று, பிற்காலம், கர்னாடக சங்கீதத்தின் வரலாற்றுக்கு அடிப்படையானவை. தமிழ்ப்பண்களே என்றும், உள்ள உண்மையை, இசை உலகுக்கு ஞாபகப்படுத்துவதைவிட, இதற்கு மேல் நான் கூறவேண்டியதல்லை,

1 சம்பந்தமூர்த்தியின் "கர்நாடகசங்கீதம்" (1970) பாகம் 3 பக்கம் 160.

2 சம்பந்தமூர்த்தியின் "கீர்தானு ஸாகரம்" (1938) புத்தகம் 1 பக்கம் 56 .

## சேக்கிழார்சுவாமிகள் கண்ட

3 ஆம் பக்க வளர்ச்சி

றது. இந்த இயக்கம் திருவடியை அடைந்து இறவா இன்பம் எய்தும் வரைக்கும் நடைபெற்றுக்கொண்டிருக்கும இத்திருவடி அடைய உடல் வேண்டும உடலுக்கு உணவு வேண்டும் அதற்கு நேர்மையான உழைப்புவேண்டும் என்ற ஞானம் எமக்கு பிறக்க வேண்டும் இந்த உடம்பு எம்பெருமானால் தரப்பட்டதென்று உணராமல் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்றதைக் கொண்டு குறிக்கோள் இலாது கேட்டேன் அப்பர் சுவாமிகளின் அமுத வாக்கின்படி மறற சாரமற்ற உள்ளீட்டில்லாத உரமற்ற பொக்க வாழ்க்கையை வாழ்ந்து அலலலுறுகின்றனர். மாயை வலைப்படும் உலக மக்கள் கனவு என்ற வாழ்வை நம்பி காற்றென்ற மூவாசைச் சுழலிலே கட்டுண்டு நித்தம் சுழலுகின்றனர். இத்தகைய முன்னொருபோதுமில்லாத அனுசகார்ப்த சுழலின்றுக் கத்தாற் பிறக்கும் குழந்தைகளைப் பேணி நல்வழியில் வளர்ப்பதென்பது மிக மிகக் கடினமான காரியமாகும் ஆயினும் பெற்றோர் தம் மனதைத் தூய்மைப்படுத்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேக்கிழார் சுவாமிகள் கண்ட தமிழகமும் இல்லறமும்

[ செ. சின்னத்துரை இளைப்பாறிய ஆசிரியர் ]

( முன் வளர்ச்சி - 8 )

கோற்பரவைக் கூத்தும் தொல்லைமரப்பாவை இயக்கமும் சீர்த் தேர்ப்பாரிற் செலவும் வேறாய்ச் செலுத்துவோர் செய்திபார்ப்பாய வேடங் கட்டி ஆடுவோர் பரிசு போலும் ஆர்ப்பாய காயந் தன்னை ஆன்மா நின்றூட்டு மாறே கன்மத்திற்கு ஈடாக கருவி கரணங்களை ஆன்மா இயக்க ஆன்மாவை எங்கும் நிறைந்திருக்கும் திருவருட் சக்தி இயக்கிக் கொண்டிருக்கி

( வளர்ச்சி 2 ஆம்பக்கம் )

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M B / 8353

(1) வி. இராமலிங்கமும்

பெண்

(2) பூரணம் — காரைநகர் கிழக்கு

காரைநகர் — வழக்காளி

எதிராக

A. கந்தையா மகள் கனகாம்பிகை

60, அரசடி வீதி, யாழ்ப்பாணம்

- எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் MB 8353 ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப் படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1976ம் வருடம் ஆனிமாதம் 15 ம் திகதி (15-6-76) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபாய் 5916 -ம் 1-8-1966 தொடக்கம் 3-8-1967 வரைக்கும் ரூபாய் 5,00/க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகையும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் முத்திரைச் செலவு ரூபாய் 12 -ம்

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோயிற்பற்று வண்ணார்பண்ணை வடமேற்கு இறை 'பிச்சாணி வளவு' நில பர. 1 குளி $1\frac{1}{2}$-ம் கட்டிடங்களும் கிணறும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு றோட்டு வடக்கு மாப்பாணர் அப்பாக்குட்டியின் காணி மேற்கு தம்பையா மகன் சேதுப்பிள்ளையின் காணி தெற்கு சின்னையா திபாகராசா பெண் பரமேஸ்வரிக்கும் அப்பாக்குட்டி நடேசுவுக்குமுரிய காணி. இடங்களும்.

இ. கனகரத்தினம்

கொமிஷனரும் விலைமதிப்பாளரும்

35/3 கொழும்புத்துறை விதி
சுண்டிகுளி
யாழ்ப்பாணம்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. MB | 12523

வைத்திலிங்கம் அரசரெட்னம்

வண்ணார்பண்ணை கிழக்கு, யாழ்ப்பாணம்.

வழக்காளி

எதிராக

நாகமுத்து கணபதி, வண்ணார்பண்ணை கிழக்கு

யாழ்ப்பாணம். — எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் எம். பி/12523 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி, 1976 ம வருஷம் ஆனிமாதம் 15 ம் திகதி (15 6-76 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபாய் 5566 ம் 23 5-71 தொடக்கம் 1-6-72 வரைக்கும் ரூபாய் 4000 க்கு 10% வீத வட்டியும் அதன்பின் முழுதொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் இதில் ரூபா 1000 மும் கோட்டுச் செலவால் ரூபா 350 களிக்கப்பட்டது.

### ஆதன வீபரம்

வட்மாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வண்ணார்பண்ணைக்கோயிற்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்கு இறைமூல்லைக்கட்டை அடி என்று அழைக்கப்படும் காணி நி. ப. 3 இதில் புறநீங்கலாக நி. ப. 1 1/2 சீதனமாகக் கொடுபட்டது, மிகுதியாய் உள்ள தெற்குப்பக்கத்தால் உள்ள நி, ப.. 1 1/2 இதில் கல்வீடும் கிணறும் வடக்குப் பக்கத்துக் காணியில் கிணற்றுப்பங்கும் வழிவாய்க்காலும் உண்டு. எல்லை கிழக்கு வேலன் சின்னத்துரை வடக்கு கதிரன் வடிவேலன் பெண் யோகம்மா மேற்கு முத்துத்தம்பி ராசையாவும் மனைவி தெற்கு றோட்டு, இதில் புறநீங்கல் ஆக, மேற்குப் பக்கத்து எல்லையால் வடக்குப் பக்கத்துக் காணிக்கு 4 சதுர அடி ஒழுங்கை ஒதுக்கப்பட்டது,

இ. கனகரத்தினம்,

கொமிஷனரும் விலைமதிப்பாளரும்

35/3 கொழும்புத்துறை வீதி
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்

## சேர். பொன், இராம

2 ம் பக்கத்து வளர்ச்சி

பொய்யாய் பழங்கதையாய் மாறாது. மெய்யாய் அவர் புகழ் நிலமிசை நீடுவாழும் தன்மையுடையன என்று கூறும் முறையில் அவர் வெளியிட்ட நூல்கள் சான்றாய் அமைந்து விளங்குகின்றன. அவர் வெளியிட்ட நூல்கள்: "Culture of the soul among Western students" (மேல் நாட்டு ஆன்மீக வளர்ச்சி "Eastern pictures to Western students" (மேல் நாட்டு மாணவருக்கு கீழைத்தேயக் கொள்கை விளக்கம்) உண்மை விளக்கம். பகவத்கீத விரிவுரை. செந்தமிழ் இலக்கணம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. எனினும், எம் தீவினைப்பயனால் அவரின் நூல்கள் பல கிடைத்தற்கரிய முறையில் செல்லரித்த நிலையில், நூல்கள் நிறம்மாறித் தொட்டவுடன் கிழியும் நிலையில் உள்ளன அவரின் நூல்களைப் புதிய பதிப்பில் பொதுமக்கள் படித்துப் பயன்பெறும் வகையில் வெளிக்கொண்டு வருவதே அவருக்கு யாம் செய்யும் கைமாறு.

— வளரும்

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

மயிலிட்டி வடக்கு, சங்கரப்பிள்ளை செல்லத்துரை வாதி

எதிராக

DCM 14238 ஈடு

காங்கேசன்துறை, முலவை - சின்னத்துரை நவரத்தினம் (காலம்சென்ற சின்னத்துரை கைம்பெண் அன்னப்பிள்ளையின் சொத்துக்குச் சட்டப் பிரதிநிதியாக) பிரதிவாதி

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்த்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 1976ம் ஆண்டு யூன் மாதம் 2ம் திகதி (2-6-76) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் குறித்த காணியில் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

[கோட்டால் அனுமதிக்கப்பட்ட தொகை ரூபா 12,388-]

கட்டப்பட வேண்டிய பண விபரம்:

ரூபா 8002-67 சதமும், மேலும் ரூபா 2000-க்கு வருடமொன்றுக்கு 7. 12. 1973 தொடக்கம் 24. 1. 975 வரை 12 வீத வட்டியும், பின்னர் விற்பனவுத் திகதி வரை 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபா. 575-10 சதமும்.

### ஆதனவிடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மயிலிட்டிக் கோவிற்பற்று முலவை இறை. முருகுத்தன் சீமா நிலப்பரப்பு 9 குளி 7 வீடும் அடுக்களையும் செய்பயிர் வான்பயிர்களும். இதற்கு எல்லை கிழக்கு வயிரவன் கிட்டினனுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம் வடக்கு குறித்த எதிராளிக்குரிய ஆதனம் மேற்கு அமெரிக்கன் மிஷனுக்குரிய பள்ளிக்கூட நிலம், தெற்கு சின்னத்தம்பி பெண் இரத்தினத்தின் ஆதனம் இதில் நிலத்திலும் பயிர்வகைகளிலும் சொரியலாய் மூன்றிலொரு பங்கும் குறித்த வீட்டில் வடக்குப் பக்கத்திலிருக்கும் நடு அறையும் அதற்குரிய விறுந்தையும் அடுக்களையில் வடக்கறையும் அதற்குரிய விறுந்தையும்.

தி. வேலுப்பிள்ளை J. P.

ஏலதாரர், நீதிமன்ற விற்பனவு ஆணையாளர் விலைமதிப்பாளர்,

கெச்சா வாசம்

வல்வெட்டித்துறை,

4-5-1976

9. 7-5-76

## கோட்டுக் கொமிஷன் விற்பனவு அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் இல: 12531

வல்லிபுரக் கோவில் றோட்டு புலோலி தெற்கு

1. நாகலிங்கம் மகேந்திரனும்
2. பெண் கமலாம்பிகையும் வழக்காளிகள்

எதிராக

வல்லிபுரக் கோவில் றோட்டு, புலோலி தெற்கு

1. சரவணமுத்து குமாரசாமியும்
2. பெண் செல்லம்மாவும் எதிராளிகள்

மேற்குறித்த இலக்க வழக்கின் தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன கீழ் விபரிக்கப்படும் ஆதனங்களை 1976ம ஆண்டு ஆனி மாதம் 19ந் திகதி (19.6.76) சனிக்கிழமை முற்பகல 10-00 மணியளவில் குறித்த ஆதனங்களிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும.

### ஆதன விபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக், வடமராட்சிப் பகுதி, கட்டைவேலிக் கோயிற்பற்று வல்லிபுரக் குறிச்சியி இறை குணரத்தை நி. பர 6, குளி $9\frac{3}{4}$, வீடும், கிணறும் எல்லை கிழக்கு கணபதிப்பிள்ளை பெண் பாறுபதிப்பிள்ளைக்குடைய வாதனம். வடக்கு றோட்டு. மேற்கு ஒழுங்கை. தெற்கு சிற்றம்பலம் கந்தையாவுக்குடையவாதனம். இவ்வெல்லைக்குட்பட யாவிலும் சொரியலாய் அரைவாசி.

இக்கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலைமதிப்பு ரூபா 6000/

(2) டிை இறை குணரத்தை நி பர: $2\frac{1}{2}$ எல்லை கிழக்கு கணபதிப்பிள்ளை வல்லிபுரத்துக்குடையவாதனம். வடக்கு றோட்டு, செல்லையா கனகசபைக்குடைய வாதனம். தெற்கு செல்லையா கனகசபைக்கும் மறுபேருக்குடையவாதனம். இவ்வெல்லைக்குட்பட்டவை யாவும்.

இதற்குக் கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலைமதிப்பு ரூ 6000/

தீர்வைத்தொகை: ரூபாய் 9858/ இன்னும் ரூபாய் 6450/ க்கு 16-11-73 தொடக்கம் 3-6-74 வரையும் 8 வீத வட்டியும் இன்னும் முழுத்தொகைக்கும் 4-6-74 தொடக்கம் பணம் இறுக்கும் வரை நூற்றுககு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 247-85.

கா. முத்துக்குமாரு ஐயர்

"தங்கவேல் ஆலயம்" நீதிமன்ற ஆணையாளரும
"சந்நிதி வேல்" கொமிசன் விலைமதிப்பாளரும
பருத்தித்துறை. 24-4-76 5. 7-5-

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல: ஈடு 563

அப்பாபிள்ளை சொக்கலிங்கம், நீராவியடி, யாழ்ப்பாணம்

வழக்காளி

எதிராக

செல்லத்துரை மயில்வாகனம், சுழிபுரம் வடக்கு சுழிபுரம்

எதிராளி

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படும் ஆதனங்கள் 1976 ம் ஆண்டு யூன் மாதம் 7 ஆம் திகதி (7-6-1976) திங்கள் காலை 10 மணி தொடக்கம் குறித்த காணிகளில் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

(கோட்டினால் அனுமதிக்கப்பட்ட தொகை ரூபா 29,111-00)

### கட்டப்படவேண்டிய பண விபரம்

ரூபா 9510 உம். மேலும் ரூபா 6000 க்கு 13 3-75 தொடக்கம் 31-10 75 வரை நூற்றுக்கு பத்துவீத வட்டியும், விற்பனவுத்திகதி வரை சட்ட வட்டியான ஐந்து வீதமும், கோட்டுச்செலவு ரூபா 622-05 சதமும்

### ஆதன விபரம்

1. வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானைக் கோவிற்பற்று சுழிபுரம் இறை "வீமாரக்கொல்லை" பரப்பு நிலை இலாச்சம் 1 (ஒன்றும்) குளி 10 பத்தும் வான் பயிர், செய் பயிர்களும எல்லை கிழக்கு மாரிமுத்து ஞானசேகரத்துக்கும பெண் இரத்தினம்மாவுக்குரிய ஆதனம், வடக்கு வயிரமுத்து தனிப்புலிசிங்க முதலியாருக்குரிய ஆதனம், மேற்கு செல்லத்துரை மயில்வாகனத்தினுதனம், தெற்கு ஒழுங்கை இடங்களும்,
2. மேற்படி இறை "வீமாரக்கொல்லை" பரப்பு நில இலாச்சம் 12 இதில் மேற்குப் புறமாக அறுதி விற்ற பரப்பு நில இலாச்சம் 4 (நாலு) நீக்கி கிழக்குப் புறமாக பரப்பு நில இலாச்சம் 8 (எட்டும்) இதற்குரிய கிணற்றுப்பங்கும் வான்பயிர், செய்பயிர்களும், எல்லை கிழக்கு மாரிமுத்து ஞானசேகரம் பெண் இரத்தினம்மாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், வடக்கு வயிரமுத்து தனிப்புலிசிங்க முதலியாருக்குரிய ஆதனம், மேற்கு விசுவலிங்கம் கிருஷ்ணபிள்ளைக்குரிய ஆதனம், தெற்கு ஒழுங்கை இடங்களும்,

தி. வேலுப்பிள்ளை J. P.

'கெச்சா வாசம்" [ஏலதாரர், நீதிமன்ற விற்பனவு
வல்வெட்டித்துறை ஆணையாளர், விலைமதிப்பாளர்]
4-5-1976

## நீரைத் தேக்கி நிலத்தை வளஞ்செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THOUGHTS TO BE TREASURED

வில்லின் விசை நாணில் கோத்திலக் கெய்தபின்
கொல்லும் களிறைந்தும் கோலொடு சாய்ந்தன,
இல்லுள் இருந்து எறி கூறும் ஒருவற்குக்
கல்கலன் என்னக் கதிர் எதிர் ஆகுமே.

When (the arrow) was placed in the bow-string and discharged to hit its mark, the five cruel elephants fell aside with the arrow. To one who shoots from his resting place, the Light manifests itself like a sparkling gem.


Hindu Organ

FRIDAY, MAY 7, 1976


## Day of Delightful Memory

ON the third phase of the waxing moon in the month of **Chittirai**, eighty seven eventful years ago our Sabhai—The Jaffna Saiva Paripalana Sabhai was founded by the closest disciples of the Great Navalar with the avowed object of propagating the peerless principles of Saiva Siddhanta.

Distinguished devotees, among whom may be mentioned the names of Vidva Siromani Ponnampalapillai, Sir P. Ramanathan, Sir W. Duraisamy, Sir A. Kanagasabai, Shri S. Sivapathasunderampillai, Shri A. Thillaiampalam, Shri R. Sivagurunather, Shri T. Muttusamipillai and Pandit V. Nagalingam who had departed from this earth, The Torch of Eternal Truth deserve the praise of the people ever since that memorable day, continues to shed religious lustre guided by sincere followers of Saiva Tenets.

May this establishment of enlightenment grow from strength to strength in the spiritual sphere.

## Reward for Real Service

Malaysian Pensioners are said to be in luck's way. It is a windfall they say. Windfall it may be, but in reality it is their due.

Pension is a word that lends itself to a misconceived meaning by mere usage. In practice it is the payment for past services on a manipulated scheme of assessment of the worth of work. Relinquishment of rights also entitles an officer to such commuted payments. Nevertheless the compensation is made because the officer had earned it.

Hence the worth of the delayed payment of the 'retention' of pension. Malaysian officers have all along been known for their devotion to duty and perseverance. They sweated for several years, cut away from their native places. Now that what has been forgotten is becoming a reality, Malaysian Pensioners have to think more of God than of anything else. In a way it may be that these gentlemen are being reminded of how they can make themselves useful to their country and community. They can form themselves into a Malayan Club like the Lions, the Rotarians and make Malayan gifts to worthy causes in the sphere of education, social service and religious work.

We do not for a moment suggest that these 'fortunates' should forgo their fortune. No one can ever dare make that suggestion. All that we say is that a small fraction of their 'extra' revenue may be diverted to the progress of the people. There are several deserving causes that unfortunately suffer owing to financial circumstances. A helping hand in such cases would not only revive the causes but also lead to further progress People's undertakings of social services generally depend on donations from the well to do Malaysian Pensioners may not all belong to the rich category. They may have their own individual problems. Yet a small portion of the lusty lucky dip in the form of repayment of retained pension may be directed to help the noble causes, for instance the Thiruketheeswaram Temple Restoration; we only give a hint.

## The Aims and ideals of Sir Ponnambalam Ramanathan

By
V. MUTTU CUMARA SWAMY

(Continued from last issue)

The Parameshwara College was founded in August 1921, at Tirunelvely, Jaffna for boys.

In the last will dated 21st July 1923, the following directions appear (1) To the Board of Directors of the Parameshwara College I give and grant ....... in support of the instruction of Saiva children in the principles of the Saiva religion and the extension of Tamil learning and sacred music, vocal and instrumental as inculcated by Manicka-Vasaka Swami, Thiru-Navukkarasu Swami Suntharar Swami, Thayumanavar Swami" ...

In a speech introducing the Bill to incorporate the Board of Directors of Parameshwara College he said:

"I have thought for many years that it was my duty to help Hindu parents in this country and India to attain their hearts' wish. This is the reason, Sir, why Parameshwara Vidyalayam was founded. Vithiyalayam means a house of learning, and Parameshwara means the most High. Any student who is admitted there will be given facilities to know something more of life than the perishable side of it. He would know the spirit within the mortal body and God within and beyond us are the only imperishable things which we should labour hard to attain, at least as hard as we labour for the perishable things of the body. In our endeavour to attain the imperishable, we have first to discover the individual spirit which is in the body, and then come to know God who is in the spirit. The spirit is therefore called the Temple of God. Unless boys and girls are taught these truths early in life and helped to prefer the principles and practices which relate to the discovery of the spirit in the body, and God in the spirit, they would be engulfed in the vertices of selfishness and sensual desires. They would naturally sink more and more into corruption, and become terrible sufferers here and in the lives to come.

(To be continued)

## Sale of Unredeemed Jewellery

I shall sell by public auction the unredeemed jewellery pawned before 1-4-1975 with Mr. V. Shanmuganathan of 32 A Stanley Road Jaffna on Tuesday 18-5-1976 commencing at 9-30 a. m. at the said pawn shop.

"Raja giri" V. S. Cuttipillai.
643, K. K. S. Road Auctioneer.
Jaffna (1 30 & 7)

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்;


Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Saiva Prakasa Press 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday May 7, 1976.

EDITOR-IN-CHIEF R. N. SIVAPIRAKASAM


## Sir P. Ramanathan Revered Memory


By
S. SIVASUBRAMANIAM
Life Member, Jaffna Saiva Paripalana Sabhai


The Hindu Organ and Inthusathanam, along with other institutions, are adequately paying homage to one of Sri Lanka's greatest personalities. The twin newspapers through their columns, editorial and otherwise by means of special articles etc. are rendering meritorious services on a rare occasion. The occurrence of such events like the anniversary of this noble soul and the services that are being rendered by the two journals constitute further justification for the continued existence of these old and honoured organs of our Hindu community, assuming but not granting that further justification if any was needed.

It is trusted that the tempo of these significant services throughout the Anniversary Year will be maintained with increasing vigor and that permanent publications in the form of books, booklets and Readers will follow in due course at least in the two National Languages of Sri Lanka and English.

It is further trusted that religious and educational organizations and institutions associated with Sir Ramanathan would also bring out additional suitable publications for the benefit of the present generation and for the sake of posterity.

There is yet another matter which merits great consideration by the public viz the publication of the second volume of the biography of this unique Leader of Sri Lanka, one of the most distinguished during recent times in Asia, written by that indefatigable and earnest biographer Mr. M. Vythilingam, Emeritus Principal, of the Chavakachcheri Hindu College. The book as a whole is monumental in the annals of our country.

May Providence vouchsafe to us of the present generation a fraction of the indomitable and single minded spirit of which Sir Ramanathan was possessed and also of the spirit of Dedication to Parameshwara, "the Lord of all mercies" (in the language of the revered Leader himself) in all matters and on all occasions.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org